
ரு. 3. Regd. No. M. 2419.



# மாத்வ மித்திரன்.

# THE MADHWA MITRAN.


EDITOR:

Adyam Bhagavatha Ranganathachariar,

KUMBAKONAM.


பௌர்ணமிதோறும் வெளிவரும்.


Vol. 16 } ஸ்வபானு ஸம்வத்ஸரம் ஆச்வீஜ மாஸம் { No.5

புஸ்தகம் 16 } 15—10—'43 சுக்ரவாரம் { நெ.5


| நெ. | பொருளடக்கம். | பக்கம். |
|---|---|---|
| 1 | ஸ்ரீ பகவத் கீதை | 95 |
| 2 | ஸ்ரீமத்வ விஜயம் | 99 |
| 3 | ஸங்கிரஹ ராமாயணம் | 103 |
| 4 | ஆராதனையா? ஹஸ்தோதகமா? | 107 |
| 5 | த்வைத வேதாந்த பால சிக்ஷை | 110 |
| 6 | ஹரிகதாம்ருத ஸாரம் | 115 |
| 7 | ஸ்வாமிகளின் செய்தி | 118 |
| 3 | விசேஷ தினங்கள். | 118 |




பிரபல டாக்டர்கள் இதை வைத்ய சாஸ்திரத்திற்கே ஒரு கண் கொடை யெனப் போற்றுகிறார்கள்.
எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும் அல்லது
ஜம்பி வெங்கட்ரமணய்யா & சன்ஸ்.
1/1, பிராடீஸ் ரோட், மைலாப்பூர், மதறாஸ்.
மற்றும்: பம்பாய், கல்கத்தா, லக்ஷ்மணபுரி,
பெங்களூர், திருச்சிராப்பள்ளி.


சப் ஆபீஸ்: 48, பெரியதெரு,
கும்பகோணம்.



ஆசிரியர் ஆத்யம் பாகவத
ரங்கஜதாசாரியார்

## மாத்வமித்திரன்

மாத்வர்களின் சாஸ்திரிய மான தமிழ் பத்திரிகை இது ஒன்றே ஸ்ரீ மத்வமதத்தின் அரிய இரகசியங்கள் ஸம்பிரதாயங்கள் மாகாத்மியங்கள் புராணசரிதைகள் மாத்வ வகுப்பு புண்ய புருஷர்களின் சரித்திரங்கள் வேதாந்த சர்ச்சைகள் தர்மசாஸ்திர விசாரங்கள் தினசரி விரதாதி குறிப்பு:— மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் முதலான அநேகிரந்தங்களின் மொழிபெயர்ப்புகள் முதலிய எண்ணிறைந்த விஷயங்கள் நிறைந்திருக்கின்றன ஸ்ரீ மத்வமதத்தை சுலபமாய் அறிந்துகொள்ள இப்பத்திரிகைக்கே உடனே சந்தாதாரராய்ச் சேருங்கள் இது பிரதி பௌர்ணமியிலும் கும்பகோணத்திலிருந்து வெளியாகிறது இதற்கு வருடசந்தா முன்பணமாய் ரூபாய் மூன்று. பிரதி சிராவணமாதமும் இப்பத்திரிகைக்கு வருட ஆரம்பமாகும்

மானேஜர், மாத்வமித்திரன்,
ஸ்ரீ வியாஸ விலாஸம்,
கும்பகோணம்.

ॐ श्री गुरुभ्यो नमः

மாத்வ மித்திரன்

# ஸ்ரீ பகவத்கீதை

## 2-வது அத்யாயம்

## ஸாங்க்ய யோகம்

(முன் 76ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு ஆத்மதத்வமானது சுலபமாய் அறியமுடியா திருக்கும்பக்ஷத்தில் அதன் பந்தம், மோக்ஷம், விடுவிக்கும் ஈச்வரன், அவருடைய மகிமை இவைகளை ப்ரதிபாதனம் செய்யும் பகவத்கீதை க்ரந்தமும் அறியமுடியாததாய்ப் போய்விடும். பின்பு அந்த பகவத்கீதையைப் பார்ப்பவனும், சொல்பவனும், கேட்பவனும் துர்லபனே ஆவானன்றோ? அதற்கு என்ன பதில்? என்று அர்ஜுனா! நீ கேட்டால், அதற்கும் இந்த ச்லோகம் சமாதானம் அளிப்பதாய் ஆகும். பச்யதி கஸ்சித் ஏனம் ஏனம் அறிய மாளாததான ஆத்மதத்வம் பரமாத்மதத்வம் முதலான அறியப்படவேண்டியதாயுள்ள எல்லா அர்த்தங்களையும் அறிவிக்கும் இந்த கீதாக்ரந்தத்தை யாரோ ஒருவன்தான் காண்பான். அவன், என்ன! இந்த கீதை அறியப்படவேண்டியதை எல்லாம் எவ்வளவு அழகாய் அறிவிக்கிறது என்று ஆச்சர்யவத் அற்புதமான க்ரந்தம்போல் ஆச்சர்யத்துடன் காண்கிறான். அப்பேர்ப்பட்டவன் ஆச்சர்யவத் துர்லபனே ஆவான். அப்பேர்ப்பட்டவர்கள் ஒருக்கால் அநேகர் இருந்தாலும் வததி ததைவ சான்ய: அன்ய: விலக்ஷணமாயுள்ள ஒருவன்தான் வததி அந்த பகவத்கீதையின் அர்த்தத்தை எடுத்துச்சொல்வான். அப்பேர்ப்பட்டவன் ஆச்சரியவத் துர்லபன். அறிவாளிகள் எல்லோருக்கும் பிறருக்கு அதை எடுத்து மனதிற் பதியுமாறு சொல்ல வராது. "உபதேக்ஷ்யந்தி தே க்ஞானம் க்ஞானின: தத்வதர்சின:" என்று முன்னாடி சொல்லப்படுகிறது. ஏனம் அன்ய: ச்ருணோதி பகவத்

கீதையைத் தெரிந்துகொண்டவன் உபதேசம் செய்பவன், இவர்களைவிட வேறானவன், இந்த பகவத் கீதையை சிரவணம் செய்கிறான். எல்லோருமே பகவத்கீதையை சிரவணம் செய்வதில்லை. அன்ய: ச்ருணோதி அநேக ஜன்மாக்களை எடுத்து அவைகளில் செய்த புண்யபலனால் குரு சுச்ரூஷை செய்த யாரோ ஒருவன் தான் பகவத்கீதையை சிரவணம் செய்கிறான். அவனும் ஆச்சரியவத் துர்லபன்தான். அவனும் ஆச்சரியவத் ச்ருணோதி அற்புதமாயிருப்பதுபோல் ஆச்சரியத்துடன் சிரவணம் செய்கிறான். ச்ருத்வாப்யேனம் வேத ந சைவ கஸ்சித் இந்த பகவத்கீதையை சிரவணம் செய்தாலும் தெரிந்துகொண்டாலும் சொன்னாலும் கஸ்சித் நைவ வேத பகவத்கீதையின் அர்த்தத்தை ஒருவனும் ஸம்பூர்ணமாய் அறியமாட்டான். ஆனால் சிறிது பாகத்தைத் தான் அறிவான். கஸ்சித் நைவ வேத பகவத்கீதையை சிரவணம் செய்தாலும் ஒருவன் அறிவான், ஒருவன் அறியவே மாட்டான் என்றும் பொருள்படும். பகவத்கீதையைப் பார்ப்பது, சொல்வது, சிரவணம் செய்வது துர்லபம் என்று இவ்வாறு அர்த்தம் செய்யப்படுவதால் பகவத்கீதையின் மகாமகிமை சொல்லப்பட்டதாய் ஆகும். முன்னாடி 18 வது அத்யாயத்தில் இந்த பகவத்கீதையின் மகிமை இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது. "ய இதம் பரமம் குஹ்யம் மத்பக்தேஷ்வபி தாஸ்யதி| பக்திம் மயி பராம் க்ருத்வா மாமேவைஷ்யத்ய சம்சய: || ந ச தஸ்மான் மனுஷ்யேஷு கஸ்சின் மே ப்ரிய க்ருத்தம: | பவிதா ந ச மே தஸ்மாதன்ய: ப்ரியதரோ புவி || அத்யேஷ்யதே ச இமம் தர்ம்யம் ஸம்வாதமாவயோ:| க்ஞானயக்ஞேன தேனாஹம் இஷ்ட: ஸ்யாம் இதி மே மதி: || ச்ரத்தாவான் அனஸூயஸ்ச ச்ருணுயாதபி யோ நர: | ஸோபி முக்தஸ்சுபான் லோகான் ப்ராப்னுயாத் புண்யகர்மணாம்" || என்று இதனால் பகவத்கீதா க்ரந்தத்தை ப்ரவசனம் செய்வதால் மகாபலன் உண்டு. அதனால் இந்த பகவத்கீதையை சம்பூர்ணமாய்க் கேள்.

பகவத்கீதை ஸமஸ்தமான அர்த்தங்களையும் அறிவிப்பதால் யதார்வத்தாய் அதைப் பார்ப்பவனும், சொல்பவனும், சிரவணாதி [illegible]ச செய்பவனும் [illegible]த்தான மகிமைகொண்டவனாயிருப்பான்.

ஆனால் வ்யாகரணாதி இதர சாஸ்திரங்களின் க்ஞானமும், உலக நடவடிக்கையின் க்ஞானமும், ஸம்ஸ்கிருத பாஷையில் விசேஷமான பரிசயமும் பகவான் ஸ்ரீ வாஸுதேவனிடம் பரம பக்தியும், இல்லாதிருப்பவனுக்கு பகவத் கீதையின் அர்த்தத்தை யதாவத்தாய் அறியமுடியாதல்லவா என்று கேள்வி கேட்டால் அதற்கும் இந்த சுலோகம் சமாதானம் அளிப்பதாய் ஆகும். ஆச்சரியவத் பச்யதி கஸ்சிதேனம் இந்த பகவத்கீதா கிரந்தத்தை யார் காண்கிறாரோ, செய்கிறாரோ, சிரவணம் செய்கிறாரோ ஏனம் ஆச்சரியவத் ஸ்திதம் அந்த அற்புதமாய் இருப்பவனை கஸ்சிதேவ பச்யதி யாரோ ஒருவன்தான் பார்ப்பான். ஆச்சரியவத் பச்யதி ஆச்சரியத்துடன் பார்ப்பான். ய: பச்யதி ஸ: ஆச்சரியவத் எவன் இவ்வாறு காண்கிறானோ, அப்பேர்ப்பட்டவன் துர்லபன் என்றிவ்வாறு அர்த்தம் சொல்லலாம். பகவத்கீதா கிரந்தத்தை எவன் நன்கு சிரவணம் செய்தும், தெரிந்துகொண்டும் அடிக்கடி இதரருக்கு உபதேசித்தும், கீதாரஸம் ஸம்பூர்ணத்தையும் அனுபவிக்கிறானோ ச்ருத்வாப்யேனம் வேத நசைவ கஸ்சித் அவன் இந்த கீதையை ச்ரவணம் செய்தாலும் தெரிந்துகொண்டாலும் சொன்னாலும் இதில் உள்ள எல்லா விசேஷங்களையும் ஸம்பூர்ணமாய் அறியமாட்டான்.

देही नित्यमवध्योऽयं देहे सर्वस्य भारत।
तस्मात्सर्वाणि भूतानि नत्वं शोचितुमर्हसि ॥ ३० ॥

30 தேஹீ நித்யமவத்யோயம் தேஹே ஸர்வஸ்ய பாரத ।
தஸ்மாத் ஸர்வாணி பூதானி நத்வம் சோசிதுமர்ஹஸி ॥

பாரத பாரதவம்சத்தில் பிறந்த அர்ஜுனா! அயம் இந்த ஈசுவரன் ஸர்வஸ்ய எல்லா ப்ராணிகளுடையவும் தேஹே சரீரத்தில் ஸம்ரக்ஷகராய் இருக்கிறார். அதனால் தேஹீ சரீரங் கொண்டவனாய் இருக்கும் ஜீவன் நித்யம் நித்யமேவ எப்போதுமே அவத்ய: நாசமில்லாதவன். தஸ்மாத் ஆகையால் த்வம் நீ ஸர்வாணி எல்லா சரீரங்களைக் குறித்தும் பூதானி ப்ராணிகளைக் குறித்தும் சோசிதும் துக்கப்பட ந அர்ஹஸி அருகனாகமாட்டாய்.

அர்ஜுனன்:— கிருஷ்ணா! மேலே சொன்ன ப்ரமேயங்கள் எல்லாம் இருக்கட்டும். மூடிவாக நான் என்ன செய்யவேண்டும் என்று வற்புறுத்துகிறீர்? சொல்லும்.

கிருஷ்ணர்:— அயம் இந்த ஜீவன் தேஹே சரீரம் நஷ்டம் ஆனாலும் தேஹீ ஸ்வரூபசரீரங்கொண்டவனே ஆவான் என்பது

யாது உண்டோ அது நித்யம் நிச்சயம். ஆகையால் ஸர்வஸ்ய அவத்ய: எல்லா வகையாலும் என்றால் பிம்பத்தின் உபாதி என்ன அதன் சன்னதி என்ன இவைகளின் நாசம் முதலான காரணங்களாலும் நாசமடையக்கூடியவனன்று. மற்றொரு வகையாயும் அர்த்தம் சொல்லலாம்— அயம் இந்த ஈசுவரன் ஸர்வஸ்ய எல்லா ப்ராணிசமூகங்களின் தேஹே சரீரத்தில் ஸ்தூலசரீரம் லிங்க சரீரம் ஸ்வரூபசரீரம் இவைகளிலும் ஸம்ரக்ஷகராய் இருக்கிறார். ஆகையால் அதாவது சம்ரக்ஷகராய் ஈசுவரன் இருப்பதால் தேஹீ நித்யம் அவத்ய: சரீரியான ஜீவன் எப்போதுமே நாசம் இல்லாதவன். "த்ரவ்யம் கர்மச காலஸ்ச ஸ்வபாவோ ஜீவ ஏவச । யதனுக்ரஹதஸ் ஸந்தி ந ஸந்தி யதுபேக்ஷயா" என்கிறது பாகவதம். "தத்ர தத்ர ஸ்திதோ விஷ்ணு: நித்யம் ரக்ஷதி நித்யதா" என்கிறது பாத்மபுராணம். ஸர்வஸ்ய ஸர்வத்ரவ்யாப்தியைக்கொண்டவராய் இருப்பதால் பகவான் ஸர்வர் எனப்படுவார். "ஸர்வம் ஸமாப்னோஷி ததோஸி ஸர்வ:" என்று முன்னடி 11-வது அத்யாயத்தில் சொல்லப்படுகிறது. ஆதலால் ஸர்வஸ்ய தேஹே என்றால் பகவானுக்கு அதீனமான சரீரத்தில் என்று பொருள்படும். இப்பேர்ப்பட்ட சரீரத்தில் உள்ள அயம் நித்யம் அவத்ய: இந்த ஜீவன் எப்போதுமே நாசம் இல்லாதவன். தஸ்மாத் ஆகலால் த்வம் நீ ஸர்வாணி பூதாநி எல்லா சரீரங்களைக் குறித்தும் எல்லாஜீவர்களைக் குறித்தும் த்வம் சோசிதும் ந அர்ஹஸி துக்கப்பட அருகன் ஆகமாட்டாய். ந அனுசோசிதும் துக்கப்படாமல் இருக்க அர்ஹஸி அருகன் ஆவாய். இவ்வாறு இருக்கத்தான் உன்னை வற்புறுத்துகிறேன். ஹே பாரத நீ பாதவம்சத்தவனாதலால் நீ இவ்வாறு செய்ய அருகன் ஆவாய். 'யோத்துமர்ஹஸி' யுத்தம் செய்ய அருகன் ஆவாய் என்று சொல்லவேண்டியதிருக்க துக்கப்படலாகாது என்று ஏன் சொல்லப்பட்டதென்றால் யுத்தம் தானாகவே ஆரம்பித்துவிட்டபடியால் உன்னை யுத்தத்திற்கு ப்ரேரணை செய்யவேண்டியதில்லை. அதற்குத் தடையாய் இருக்கும் சோகமோகங்கள் இல்லாமற் செய்வதுதான் நான் செய்யவேண்டியதாகும். சோகமோகரூபமான ப்ரதிபந்தகம் போய்விட்டால் வீரனும் தார்மிகனும் இருக்கும் நீ ப்ரவிருத்திப்பாய் என்று இதனால் சூசனை செய்யப்பட்டதாய் ஆகும். உன்னை சாக்கிட்டு இந்த இருபது சுலோகங்களால் இந்த உபதேசம் செய்யப்பட்டது என்று அறி.

(தொடரும்)

ஸ்ரீ நாராயணபண்டிதாசாரியார் இயற்றிய

# ஸ்ரீமத்வ விஜயம்

## 15-வது ஸர்க்கம்.

(முன் 59-ம் பக்கத்தொடர்ச்சி)

65. மேற்கண்டவாறு ஸ்ரீ மத்வாசாரியார் உபந்யாஸம் செய்த பின், எப்படி ஓர் வீரன் தனது எதிராளியை நிக்ரஹம் செய்ய தனுஸ்ஸின் நாணினின்றும் கிளப்பியதும், வேகத்திற்காக வியாஸியபக்ஷியின் சிறகுகளைக் கொண்டதும், தீக்ஷ்ணமானதும் ஆன பலவகை பாணங்களை பலத்துடன் இழுத்து எதிராளியிடம் விடுவானோ, அப்படி ஸ்ரீ த்ரிவிக்ரமபண்டிதாசாரியார் அவருடைய அறிவாகிய தனுஸ்ஸின் குணத்தினின்றும் வெளிக்கிளப்பப்பட்டதும், மத்வசித்தாந்தத்திற்கு விருத்தமான கக்ஷிகளைக் கொண்டதும், வ்யாப்தி முதலானவைகளைச் சொல்லி அதனால் திடப்பட்டிருப்பதும் பலவகையுமான தர்க்கங்களை யுக்திகளைத் தனது புத்திபலத்தைக் கொண்டு ஸ்ரீ மத்வாசாரியாரிடம் ப்ரயோகித்தார். 66. அவ்வாறு த்ரிவிக்ரமபண்டிதாசாரியார் வாதம் செய்தவுடன், எப்படி யுத்தம் செய்பவர், எதிரி உபயோகித்த பாணங்களை அவைகளைவிட திடமான தன் பாணங்களால் அதிசீக்ரமே சேதிப்பாரோ, அப்படி பூர்ணப்ரக்ஞரான ஸ்ரீ மத்வாசாரியார் சிரித்துக்கொண்டு, த்ரிவிக்ரமபண்டிதர் சொன்ன யுக்திகளைவிட ப்ரபலமான யுக்திகளை அவர் சொன்ன க்ஷணமே விளையாட்டாகவே சொல்லிக் கண்டித்தார். 67. த்விஜச்ரேஷ்டனாகிய க்ஷத்திரியன் எப்படி பாணயுத்தத்தில் தோற்றுப்போனவுடன் த்விஜர்களல்லாத சூத்ராதிகளால், வேதமந்திரங்களைக் கொண்டதால் தரிக்கமுடியாதவைகளும், அல்லது இதரர்களால் தரிக்கமுடியாதவைகளும், பதில் அஸ்திரம் தெரியாதவர்களால் திருப்பமுடியாதவைகளுமான அஸ்திரங்களை எதிராளியிடம் ப்ரயோகம் செய்வானோ, அப்படி த்விஜச்ரேஷ்டரான த்ரிவிக்ரமபண்டிதாசாரியார் தர்க்கத்தால் வாதம் செய்து தோற்றுப்போனபின், ஸ்ரீ மத்வாசாரியாரை ஜயிக்க இச்சை கொண்டு, சாமானிய க்ஞானமுள்ளவர்களால் கேட்டதை ஞாபகத்தில் வைத்துக்

கொண்டு எல்லாவற்றையும் பூராவாய் அறிய மாளாதவைகளும், எதிராளியால் வேறு அர்த்தம் கொடுக்க இருப்பமாளாதவைகளுமான வேதவாக்யங்களை ஸ்ரீ மத்வாசாரியார் சொன்ன ஸித்தாந்தத்திற்கு எதிராக ப்ரயோகம் செய்தார். 68. ஓர் வீரன் எப்படி தன் அஸ்திரத்தால் எதிராளி போட்ட அஸ்திரத்தை அடக்கிவிடுவாரோ, அப்படி ஸ்ரீ மத்வாசாரியார், த்ரிவிக்ரம பண்டிதர் சொன்ன வேதவாக்யங்களைவிட நிரவகாசமானவைகளும், பஹுளமானவைகளும், அதனால் மிகவும் பலிஷ்டமானவைகளுமான வேதவாக்யங்களால் பூர்வபக்ஷ வாக்யங்களுக்கு வேறு அர்த்தம் சொல்லி அவைகள் அவருடைய கக்ஷியை ஸ்தாபிக்காதென்று அடக்கிவிட்டார். 69. இவ்வாறு சக்ராயுதகாரியான ஸ்ரீ விஷ்ணுவின் நண்பரான ஸ்ரீ மத்வாசாரியார் ஸ்ரீ த்ரிவிக்ரமபண்டிதாசாரியாருடன் தொடர்ந்து 15-நாட்கள் வாதம் செய்து எல்லா பிரசினங்களுக்கும் பதில் சொல்லிவிட்டு ஸ்ரீ த்ரிவிக்ரமபண்டிதரை மேற்கொண்டு பதில் சொல்லமுடியாமலும் மற்றும் பூர்வபக்ஷம் செய்யமுடியாமலும் செய்தார். 70 உத்தம ஜீவரானதால் ஸ்ரீ த்ரிவிக்ரமபண்டிதாசாரியார் ஸ்ரீ மத்வாசாரியாரை ஸாஷ்டாங்கம் நமஸ்கரித்து "ஹே ஸ்வாமின்! என் சிறுபிள்ளைத்தனத்தை க்ஷமிப்பீராக! தங்கள் திருவடித்தாமரை தாசிகளுக்கு தாஸத்வம் எப்போதும் நான் செய்ய எனக்கு அனுமதி அளிப்பீராக என்று சொன்னார். 71. அவ்வாறே ஸ்ரீ மத்வாசாரியார் ஸ்ரீ த்ரிவிக்ரமபண்டிதருக்கு தன் தாஸத்வத்தை அளித்தபின் தன் பிரம்மஸூத்திர பாஷ்யபாடத்தைச் சொல்லி சிரவணம் செய்விக்க ஆரம்பித்தார். அதைக்கண்டு சேர்ந்தாற் போல் ஸத்ஜனங்கள் சந்தோஷப்படவும் துர்ஜனங்கள் துக்கப் படவும் ஆரம்பித்தனர். 72. ஸ்ரீமத்வாசாரியார் செய்த பிரம்ம ஸூத்திர பாஷியத்திற்கு ஆசாரியாளான அவருடைய ஆக்ஞையை சிரமேற்கொண்டு, குருவின் ஆக்ஞாபலம் இல்லாமல் செய்ய முடியாததான தத்வப்ரதீபம் என்னும் ஓர் டீகையை—விளக்கத்தை—இயற்றி சருதிகளுக்கு வ்யாக்யானகர்த்தாவாதலால் மகாசாரியாளான ஸ்ரீ மத்வாசாரியாரைப் பார்த்து இவ்வாறு சொன்னார்.

73. சமுத்திரத்தினின்றும் ரத்னங்களை எப்போதும் எடுத்தும் அவைகள் முடிந்ததாய் எப்படி ஆகாதோ, அப்படி தேவரீ

நுடைய பாஷியங்களாகிய ஸமுத்ரத்தினின்றும் உபக்ரமம் உபஸம்ஹாரம் முதலான எண்ணிறைந்த ந்யாயங்கள் பண்டிதச்ரேஷ்டர்களால் எவ்வளவு எடுக்கப்பட்டாலும் அவைகள் முடிந்ததாய் ஆகவில்லை. என்னவென்று இந்த தேவரீருடைய பாஷியங்களின் காம்பீரியத்தைச் சொல்வது! மிகவும் ஆச்சரியம்.
74. தேவிகளை அவர்களின் வீடுகளில் அவர்களுக்கு இஷ்டப்பட்டவர்களான தேவர்கள் அவர்களுடன் கூடியிருப்பதால் அவர்களை சந்தோஷப்படச் செய்வதுபோல், தச உபநிஷத்துக்களை அவைகளின் பாஷ்யங்களாகிய ஆலயங்களில் அவைகளுக்கு தேவரீரால் சொல்லப்பட்டிருக்கும் அர்த்தங்கள் பொருந்தியிருப்பதால் அவைகளை ஸுலபமாய் அர்த்தமாகும்படி ப்ரஸன்னமாக்குகின்றன. 75. இதராளால் தடுக்கமுடியாதவைகளான கிரணசமூகங்களைக் கொண்டு சூரியசந்திரர்களால் ஜகத்தே பிரகாசப்படுவதுபோல் தேவரீருடைய கீதாதாத்பர்யம், கீதாபாஷ்யம் இந்த இரண்டு நூல்களால் அவர்களில் சொல்லியுள்ள இதரர்களால் கண்டிக்கப்படமுடியாததான வாக்யசமூகங்களால் ப்ரமேயங்கள் எல்லாமே வெளிப்படுத்தப்படுகின்றன. 76. தேவரீருடைய சித்தமாகிய மந்தரபர்வதத்தினின்றும் கடையப்பட்டதாயுள்ள மகாபாரதம் ராமாயணம் பாஞ்சராத்திரம் அஷ்டாதச புராணங்கள் முதலான சமுத்திரத்தினின்றுமுண்டான தேவரீர் இயற்றிய ஸ்ரீ மகாபாரத தாத்பர்ய நிர்ணயமாகிய நூலாகிய அமிர்தத்தை எந்த ஸத்புருஷன்தான் ஸேவிக்காமல் இருப்பான். 77. குஹ்ய பாஷை, தர்சன பாஷை, ஸமாதி பாஷை ஆகிய பாஷாத்ரயங்களை அறியாதவர்களாய் புராணங்களையே சிரவணபடனாதிகளைச் செய்வதால் தத்வஞ்ஞானமடைய ஸ்தானமாகக் கொண்டு, அதில் பிரவிருத்தித்து நடப்பவர்களான ஜனங்களுக்கு தேவரீர் இயற்றிய பாகவத தாத்பர்ய நிர்ணயம் என்னும் நூல் அந்த பாஷாத்ரயாதிகளை அறிவிக்கும் பெரும் நண்பனாய் இருக்க தேவரீர் செய்திருக்கிறீர். 78. தேவர்களால் ஆசிரயிக்கப்பட்ட நிழலைக்கொண்ட உத்தமமான கல்பவிருக்ஷம்போல் இருக்கும் உத்தமமான அர்த்தத்தோடு கூடியதும், தேவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட சித்தாந்தத்துடன் [illegible] தேவரீர் இயற்றிய தந்திர ஸாரம் என்னும் [illegible] தார்தான் [illegible]ருடைய

எண்ணம் நிறைவேறுதவராய் இருப்பார்? எல்லோருடைய அபீஷ்டசித்தியும் உண்டாகும். 79. ஹே! கருணாஸமுத்ராரான ஸற்குருவே! ஜனங்களுக்கு வாதம், ஜல்பம், விதண்டை ஆகிய கதைகள், பிரமாணங்கள் இவைகளின் ப்ரகாரத்தை அறிவிப்பதற்கு இரண்டு கண்களைப்போன்ற கதாலக்ஷணம் பிரமாணலக்ஷணம் என்னும் இரண்டு ப்ரகரண நூல்களை தேவரீர் இயற்றினீர். 80. எப்படி விராடராஜனின் நகரத்தில் உத்தரகோக்ரஹணத்தில் அர்ஜுனன் ஒருவனாகவே இருந்து சத்ருக்களை ஜயித்தானோ அப்படி தேவரீர் இயற்றிய விஷ்ணு தத்வ நிர்ணயம் என்னும் நூல் ஏகாகியாய் சகாயமின்றி எதிர்வாதிகளின் தலையை மிதிக்கிறது. அப்பேர்ப்பட்டதை யார்தான் பூஜிக்காமல் இருப்பார்கள். 81. காற்றால் மூட்டப்பட்ட சிறு சிறு நெருப்புப்பொரிகள் உலர்ந்த காட்டை எப்படி நாசமாக்குமோ அப்படி தத்வோத்யோதம் முதலான ப்ரகரண க்ரந்தங்கள் சிறியதாய் இருந்தாலும் வாயு பகவானாகிய தேவரீரால் ப்ரேரிக்கப்பட்டதாய் விருத்தமாயுள்ள சித்தாந்தத்தை நாசமாக்குகிறது. 82. யசோதாதேவியின் குமாரராகிய ஸ்ரீ கிருஷ்ணரால் தன்னுடைய வாயின் உட்புறத்தில் அநந்தமான ஜகத்தை தன்னுடைய ஸாமர்த்தியத்தை அறிவிக்க ப்ரகடனம் செய்யப்பட்டதுபோல், தேவரீரால் இயற்றப்பட்ட பிரம்மஸூத்திர பாஷியத்தின் ஸங்கிரஹமான அணுபாஷியத்தில் தேவரீரால் தேவரீருடைய ஸாமர்த்தியத்தை அறிவிக்க அபரிமிதமான அர்த்தம் ப்ரகடனம் செய்யப்பட்டிருக்கிறது. 83. பகவன்! லௌகிக விஷயமாயுள்ள தேவரீருடைய விசித்ரமான கவிதாசக்தியை அறிவித்து இரகசியமாய் வைக்கப்படவேண்டியதாயுள்ள மகாபாரத சங்கிரஹமான யமகபாரதம் என்னும் காவியத்தை தேவரீர் இயற்றினீர். 84. ஸமுத்ரத்தில் இவ்வளவு ரத்னங்கள் இருக்கின்றன என்று யார்தான் எண்ணுவார்கள்? அதுபோல் தேவரீரிடத்தில் நாநாவிதமான ஸுபாஷிதங்கள் ஸ்தோத்திரங்கள் காதைகள் முதலான ரூபங்களைக்கொண்ட உத்தமமான கிருதிகள் இருப்பதை யார்தான் எண்ணமுடியும்? தேவரீரால் இயற்றப்பட்ட இதர ஸ்தோத்ரங்கள் கிருஷ்ணாமிர்த மகார்ணவம் ஸதாசாரஸ்மிருதி ஜேயந்தி கல்பம் முதலான நூல்கள் எண்ண மாளாதவைகள்.

(தொடரும்)

ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார் இயற்றிய

# ஸங்கிரஹ ராமாயணம்

## கிஷ்கிந்தா காண்டம்

### 4வது ஸர்க்கம்

(முன் 84ம் பக்கம் தொடர்ச்சி)

பிறகு சுக்ரீவன் முஷ்டி கட்டி வாலியினுடைய சிரஸ்ஸில் வெகு லாகவமாய் ப்ரஹாரம் செய்தான். இந்திரபுத்திரனை வாலி ரத்தத்தைக் கக்குவதைப் பார்த்து, சுக்ரீவன் வெகுசீக்கிரம் ஓர் உயர்ந்த ஆலமரத்தைத் தூக்கி, அதனால் வாலியை பின்னும் ப்ரஹாரம் செய்தான். ஸ்ரீ ராகவனால் விருத்தியடைந்த பராக்கிரமம் கொண்ட ஸுக்ரீவன் இவ்வாறு லாகவமாய் வாலியை ப்ரஹாரம் செய்யவும் வாலியின் சரீரக்கட்டு விசேஷமாய் தளர்ந்து போய் பூமியில் விழுந்துவிட்டான். அதனால் வலி அடைந்து ஓர் முகூர்த்தகாலம் கிடந்து பிறகு தேற்றிக்கொண்டு கோபாக்னியால் ஜொலிக்க ஆரம்பித்தான். சதமன்யுவாகிய இந்திரனுடைய குமாரனை வாலி மீண்டும் யுத்தம் செய்ய ஆரம்பித்தான். ஜேஷ்டனை வாலியின் தேஜஸ்ஸால் கனிஷ்டனை ஸுக்ரீவனின் காந்தி, சூரியனுடைய காந்தியால் சந்திரனின் காந்தி குன்றிப்போவதுபோல் குன்றிப்போகவும், ப்ரபுவான ஸ்ரீ ராகவனுடைய அமிர்தமயமான பாணமானது வாலியின் சரீரத்தைப் பிளந்து அவனுக்கு மரணத்தை உண்டாக்கிக்கொண்டு தலையின் நடுவைப் பிளந்தது. மனதால் ராகவனை நமஸ்கரித்தும் சேஷ்டை குன்றிப்போய் பூமியில் விழுந்தான்; எதிரில் வந்த லக்ஷ்மீபதியான ராகவனைப் பார்த்து பின்வருமாறு சொன்னான்— "ஹே ராமசந்திரா! நீர் ராஜரிஷிகளில் சிரேஷ்டராவீர். இதராளுடன் யுத்தம் செய்திருப்பவனும், குற்றமற்றவனும், வனமிருகமாய் இருப்பவனும், பசுவுக்கு ஸமானனுமான என்னைத் தாங்கள் எப்படிக்கொன்றீர்? ஐந்து நகங்களுள்ள ப்ராணிகளில் ஐந்து ப்ராணிகள்தான் சாப்பிட அருகமானவைகள் என்று சாஸ்திரமறிந்தவர்கள் அறிவார்

கள். 1. முயல், 2. முட்பன்றி, 3. உடும்பு, 4. காட்டு அணிப் பிள்ளை, 5. ஆமை. அப்படியிருக்க நானோ வானரன். எங்கள் தோலையாவது எலும்பையாவது மாம்ஸத்தையாவது அறிவாளி கள் தொடமாட்டார்களே! அப்பேர்ப்பட்ட வானரஜாதி யாகவும் ஐந்து நகமுள்ள ப்ராணியாகவும் உள்ள என்னை தாங் கள் எதற்காகக் கொன்றீர்?" என்றிவ்வாறு தர்மஸூக்ஷ்மத்தை அறியாத வாலி ராகவனின்மீது ஆக்ஷேபணை சொன்னான். அதற்கு பகவான் சிரித்துக்கொண்டு உத்தமமான அடியிற்கண்ட பதிலைச் சொன்னார்.

"மிருகங்களைக் கொல்ல வலை என்ன, மறைந்து அடிப்பது என்ன, சுருக்கு கயிறுகள் என்ன இவைகள் பிரம்மாவால் ஏற் படுத்தப்பட்டிருக்கின்றன. அதனால் சாகாமிருகமான உன்னை மறைந்து அடித்தேன். நீ உன்னை மிருகமென்று எண்ணினாயா? மிருகமல்லாதவன் என்று எண்ணினாயா? நீ தர்மத்தில் திருஷ்டி வைத்தவனாய் இருப்பதால் எப்படி உன் தம்பியைக் கைவிட் டாய்? மற்றும் அவனுடைய பாரியை உனது நாட்டுப்பெண் ணுக்கு ஸமமானவளை எப்படி அனுபவித்தாய்? நான் மார்க்கம் தவறிப்போன ஸாதுக்களையும் துஷ்டர்களையும் கொல்பவன். அதனால் உன்னை வேண்டுமென்றே கொன்றேன். உனக்கு அபேக்ஷை இருந்தால் உன்னை உயிர்ப்பிக்கிறேன்" என்று இவ் வாறு அமிர்தத்திற்கு ஒப்பான ராகவனுடைய ரமணீயமான வாக்கைக்கேட்டு, மனது தெளிவு அடைந்தவனாய், வாலி கண்களி னின்றும் தாரைதாரையாய் ஜலம் விட்டுக்கொண்டு, ராகவனிடம் வைத்த பக்தியால் கமறிய தொண்டையுள்ளவனாய் இவ்வாறு பேசினான்— "ஹே ஸ்வாமின்! வேதனையால் வெளிவந்த என் வார்த்தையை க்ஷமிக்கவேண்டும். என் விஷயத்தில் ஜுகுப்ஸை அடையலாகாது. என் குழந்தையும் தங்கள் தாஸனுமான தங்க பாஹுபுரி தரித்த அங்கதனை ஸம்ரக்ஷிக்கவேண்டும். மரணகாலத் தில் யாருடைய நாமானவை உச்சாரம் செய்ய வரவேண்டுமே என்று உடம்பில் சக்தியுள்ள காலத்தில் தபஸ், தானம்முதலான வைகளைச் செய்கின்றனரோ, அப்பேர்ப்பட்ட நாராயணனை தங்களைப்பார்த்து எனக்கு மரணமேற்படச்செய்தது என்னிடம்

தாங்கள் காட்டிய அநுக்ரஹமே ஆகும் என்று சொல்லி வாலி மூர்ச்சை அடைந்து ப்ராணனை விட்டான். மரணத்தைப் போக்கும் மஹேந்திரனால் கொடுக்கப்பட்ட தங்கமாலையை தரித்தவளான தாரனுடைய கன்யகையான வாலிபார்யாளான தாரை, தன்பர்த்தா வாலி இறந்துவிட்டான் என்று கேட்டு அழுதுகொண்டு, அந்தக் குகையினின்றும் வெளிக்கிளம்ப எண்ணங்கொண்டாள். கண்களினின்றும் கண்ணீர்களை விட்டுக்கொண்டும் அங்குமிங்கும் ஓடிக்கொண்டும் துக்கப்பட்டுக்கொண்டும் பெருமூச்சு விட்டுக்கொண்டும் இருக்கும் ராஜமஹிஷியான தாரையைப் பார்த்து, வாலியின் சேவகர்கள், "தாயே! நீங்கள் வீரனைப் பெற்றவள். வீரனுடைய பத்னி, பயமில்லாமல் எங்கு போகிறீர்? நாங்கள் இந்த இடம்விட்டு ஓடிப்போய் உங்கள் குழந்தையான அங்கதனை ஸுக்ரீவனாகிய ராக்ஷஸனின்றும் காப்பாற்றுகிறோம்" என்று சொல்ல, பயந்தும் கலங்கிப்போயும் அங்குமிங்கும் ஓடிக்கொண்டும் இருக்கும் வானரர்களைப் பார்த்து பதிவ்ரதையான தாரை இவ்வாறு சொன்னாள். "ராஜ்யத்தில் ஆசையுள்ள தம்பி, ராஜாவாகிய அவருடைய அண்ணனை தேசம் காலம் பலம் இவைகளுக்கு உசிதமாய்க் கொன்றிருக்கிறார். உங்களுக்கு இனி ராஜா தம்பியான ஸுக்ரீவன்தான். வானரர்களா! எங்கு போகப் போகிறீர்கள்? உயிர் போன பிணத்துக்கு பாஹுபுரியால் ப்ரயோஜனம் எப்படி இல்லையோ, அப்படி அங்கதனால் எனக்கு இனி என்ன ஆகவேண்டும்? அந்த ஸுக்ரீவனை ஸ்ரீ ராகவன் இனி ஸம்ரக்ஷிப்பார், நான் என் நாதனான வாலியுடன் உடன்கட்டை ஏறப்போகிறேன்" என்றிவ்வாறு ப்ரலாபம் செய்துகொண்டு பூமியில் விழுந்து கிடந்த வாலியைக் கண்டாள். ரத்தம் தோய்ந்து சிவந்த தூசிகள் படிந்த வீரசயனத்தில் படுத்திருந்த பர்த்தாவின் பாதமூலத்தில், ஹா நாதா! என்று வீறிட்டுக்கொண்டு விழுந்தாள். உயர்ந்த யானையால் வாழைமரம் சாய்க்கப்பட்டால் எப்படியோ அப்படி பதிவ்ரதையான தாரை துக்கத்தால் அடிபட்டாள்.

வாலியின் பிணத்தை அடைந்து தன் உடம்பை அடித்துக்கொண்டு வாலியின் ஸ்திரீகள் ப்ரலாபம் செய்தனர். தலைமயிரை

அவிழ்த்துக்கொண்டு ஆபரணங்களையும் மாலிகைகளையும் வாரி இறைத்துக்கொண்டு, வீறிட்டுக்கொண்டு கண்களினின்றும் ஜலத்தைப் பெருகவிட்டுக்கொண்டு இருக்கும் வாலியின் ஸ்திரீகளைப் பார்த்து யார் கிருபை செய்யவில்லை? தன் சரீரத்தை அடிக்கடி அறைந்துகொண்டு துக்கத்தால் கலங்கிப்போய் பதியே சரணமாகக் கொண்ட சிறு பெண்ணான தாரை இவ்வாறு ப்ரலாபம் செய்தாள். "ஹே பர்த்தாவே! எழுந்திரும். நான் தாரை. உங்களுக்கு மிகவும் இஷ்டமானவள். நான் வேண்டுகிறேன். எந்த குற்றத்தையும் செய்யாதவளும், பதிவ்ரதையுமான என்னை, ஹே நாதா! தாங்கள் என் தேற்றலாகாது. உங்களுடைய ப்ராணனைப் போன்ற மகன் அங்கதன் சமீபத்தில் நிற்கிறான். அவன் தீனனாய் உரக்க அழுகிறானே? நீங்கள் எழுந்திருந்து அவனைத் தேற்றிவையுங்கள். லோகபாலர்களின் பராக்கிரமம் கொண்ட நாதா! தாங்கள் லோகாந்தரம் போய்விட்டீர் போலும். உங்களுக்கு ஸ்வபாவமாகவே உள்ள கருணையையும் என்னையும் விட்டுவிட்டீரே. ஹே காந்தா! இரகசியத்தில் என்னைப் பார்த்து நான் எல்லோரையும் விட ப்ரியமானவள் என்று சொன்னீரே. அப்படியிருக்க நீர் கபடம் செய்து தேவதாஸ்திரீகளை என்னை விட்டு நிச்சயம் அடைந்துவிட்டீர். விரஹாக்னியால் மிகவும் சங்கடப்பட்டவளாயும் விதவையாய்ப் போய்விட்டவளுமான என்னைத் தாங்கள் சென்ற இடத்திற்கே அழைத்துப் போகுங்களேன். எனக்கு அங்கு ஓர் அந்தஸ்தும் வேண்டாம். தங்கள் வீட்டு வேலைக்காரியாகவே இருக்கிறேன். ஹே நாதா! கபிநாதன் தாங்கள். சத்ருக்களாகிய உலர்ந்த காட்டுக்கு தீ போன்றவர். ராமசந்திரனாகிய சமுத்திரத்தை அடைந்து நாசமடைந்துவிட்டீர். ராகவனையே நாதனாகச் சரணம் அடைவோம் என்று சொன்னேன். அபிமானம் என்னும் ஜ்வரம் பாதித்து இருந்ததால் பத்யமான என் அந்த வார்த்தையில் தங்களுக்கு ருசி ஏற்படவில்லை. அழகாயும் சமத்காரமாயும் இருக்கும் தங்கள் கடைக்கண் பார்வையையும், மங்களமாயும் வெண்மையாயும் இருக்கும் தங்கள் சிரிப்பையும் நான் ஸுகிருதம் செய்திருந்தால், நான் வேறு ஜன்மத்தில்தான் பார்ப்பேன். ஸுக்ரீவா! உன் தமையனின் ரக்தம் தோய்ந்த

ஸாம்ராஜ்யத்தை இனி அனுபவிக்கலாம். ராகவனை அடைந்து நல்ல புத்தி கொண்டு நீ சமாதானம் செய்யவில்லை. நாதனை விதியே! என்னிடம் கருணை செய். பாதி சரீரத்தை வீணாய்க் கஷ்டப்படுத்துகிறாயே! என் பர்த்தாவான மீதி பாதியுடன் சேர்த்துவிடேன்'' என்றிவ்வாறு இதராளுக்கு கருணை வரும்படி வாலி பத்னியான தாரை காதுக்கு இனிமையான குரலுடன் அழுதுகொண்டிருந்தாள். பர்த்தாவின் மடியில் தலையை வைத்துக்கொண்டு இறந்துவிட நிச்சயித்தாள். (தொடரும்)

# ஆராதனையா? ஹஸ்தோதகமா?

## கும்பகோணத்தில் ஓர் ரஸமான தாவா.

ஜ்யேஷ்டபஹுள த்ரயோதசி ஸ்ரீ விஜயீந்திர ஸ்வாமிகளின் ஆராதனை தினமாகும். அன்று ஸ்ரீ விஜயீந்திரரின் பிருந்தாவனத்துக்கு விசேஷமாய் பஞ்சாமிருத அபிஷேகம், அலங்காரம், அர்ச்சனை, தூப தீப நைவேத்யங்கள், 5-பிராம்மணர்களுக்கு வஸ்திராதிகளுடன் அலங்கார பந்திபோஜனம், இந்நகரிலுள்ள எல்லா மாத்வர்களும் அழைக்கப்பட்டு அவர்களுக்கு விசேஷ போஜனம் முதலியவைகள் அளிக்கப்படும். சென்ற சித்திரபானு வருஷத்தில் அதிக ஜ்யேஷ்டமாஸம் நேர்ந்ததால் அந்த மாதத்திய பஹுள த்ரயோதசியன்று (12—5—42) பிரதி வருஷம் அந்த தினத்தில் ஸ்ரீவிஜயீந்திரருக்கு நடத்தும் ஆராதனையைப்போலவே, இந்நகர் பிரபல மிராசுதாரரான ஸ்ரீமான் K R. ரகுநாதராவ் தமது சொந்த செலவில் இந்நகரிலுள்ள எல்லா மாத்வ மகாஜனங்களுக்கும் அழைப்பு அனுப்பித்து அலங்காரபந்திபோஜனத்துடன் விசேஷ பிராம்மணபோஜனம் முதலானவைகளை அநேக நூற்றுக் கணக்கான ரூபாய் செலவில் செய்வித்தார். பிரதி வருஷம் ஆராதனையன்று கர்ப்பூரார்த்தி, தீர்த்தம், ஹஸ்தோதகம் இவைகளில் மகாஜனங்களால் ஸமர்ப்பிக்கப்படும் பணத்தை, யாருடைய முறையாய் இருந்தாலும், பூஜகர்கள் எல்லாருமே சமபாகமாய்ப்

பிரித்துக்கொள்வார்கள். ஆராதனையைப்போலவே ஆயிரக்கணக்கான ஜனங்கள் வரவழைக்கப்பட்டு கூடியிருந்ததால், வரும்படியும் பிருந்தாவனத்துக்கு அதிகமாய் வந்ததோ, ஓர் பூஜகரான ஸ்ரீமான் விஜயீந்திராசாரியார் வழக்கப்படிக்குள்ள தனது மூன்றில் ஒரு வீதத்தொகையைக் கொடுக்கவேண்டுமென்று, அதை ஏக தேசமாய் எடுத்துக்கொண்ட அந்த முறைக்காரரான ஸ்ரீமான் புருஷோத்தமாசாரியார்மீது, கும்பகோணம் முனிசிப் கோர்ட்டில் 1943-வருஷத்து ஸ்மால்காஸ் 95ம்-நம்பரில் ஓர் தாவா தொடுத்தார். அதிக மாஸத்தில் நடத்தப்பட்ட அந்த சடங்கு ஹஸ்தோதகமாகும் என்றும், அது ஆராதனையாகாதென்றும், ஆராதனையாய் இருந்தால்தான் வழக்கப்படிக்குள்ள வாதியின் வீதத்தை அடைய பாத்தியம் உண்டு என்றும் பிரதிகக்ஷி சொல்லப்பட்டதாய்த் தெரியவருகிறது. அலங்காரபந்தி பிராம்மணர்கள் உட்கார்த்திவைக்கப்பட்டனரோ, ஹஸ்தோதகத்தில் அப்படி உண்டா என்றால், அவர்களுக்கு ஆவாஹனம் அர்க்யம் முதலானவைகள் கொடுக்கப்படவில்லை என்றும், அப்படிக் கொடுப்பது அதிக மாஸமானதால் சாஸ்திரமுறையாகாதென்றும் பதில்கக்ஷி சொல்லப்பட்டதுதான் வெகு ரஸமாய் இருந்தது.

அச்சமயம் பிராம்மணர்களுக்கு இன்னது நடத்தப்பட்டது என்பதின் உண்மை எப்படி இருந்தாலும், பிரதிவாதி ஸ்ரீமடத்தின் பொறுப்பு வாய்ந்த, ஸர்வ அதிகாரம் பெற்ற, ஸூபேதார் பதவியில் இருப்பவரானதால், அலங்காரபந்தியில் அன்று பிராம்மணர்கள் கேவலம் லௌகிகரீதியில் உட்கார்த்திவைக்கப்பட்டனரென்றும்,ஸங்கல்பம் ஆவாஹனம் அர்க்யம்முதலியவைகள் செய்யப்படவில்லை என்றும், இவைகள் செய்யப்பட்ட பிராம்மணர்களைப்போலவே வஸ்திராதிகளை இவர்கள் அடையச் செய்யப்பட்டனர் என்றும் அர்த்தமாகும்படிவெளிச்சொன்னது நம்மவர்கள் கவனிக்கவேண்டியதாகும். அலங்காரபந்தியில் ஆவாஹனாதிகள் இல்லாமல் பிராம்மணர்கள் உட்கார்த்தப்படுவது சாமானியர்களை ஏமாறச்செய்வதாகும். அலங்காரபந்தியில் பிராம்மணர்கள் போஜனம் செய்யும்பொழுது அந்த ஸ்வாமிகளே போஜனம் செய்வதாய் சாமானியர்கள் எண்ணுகின்றனர். அச்சமயம் அவர்களை

தரிசிப்பதே மகாஸௌகிருதம் என்று உறைபாடுகின்றனர். அவர்களுக்கு அச்சமயம் அளிக்கும் காணிக்கையை அந்த ஸ்வாமிகளே நேரில் பெற்றுவிட்டதாய் சந்தோஷப்படுகின்றனர். அவர்கள் உண்ட எச்சிலையில் பக்தி மிகுந்து பிரண்டு உடம்பில் எல்லாம் எச்சிலைப் பூசிக்கொண்டும், தலையில் அந்த எச்சிலிலைத்துண்டங்களை எல்லாம் ஸ்திரீபுருஷர்களாய் தூக்கிக்கொண்டும் வாத்ய கோஷங்களுடன் ஆனந்த தாண்டவம் புரிந்துகொண்டு பகிரங்கமாய்த்தெருக்கள் வழியாய் ஊர்வலம் போய் அகமகிழ்வது பல ஊர்களில் நேரில் காணலாம். இங்கும் அந்த காக்ஷி காணப்படும். அலங்காரபந்தி போஜனத்திற்கு சாமானியர்கள் இவ்வளவு மகத்வத்தை அளித்திருப்பதற்குக் காரணம் அதையுண்ட பிராமமணர்கள், அந்தந்த ஸ்வாமிகளை அச்சமயம் ஆவாஹனம் பெற்றதால்தான, என்று ஸௌலபமாய் நாம் ஊகிக்கலாம். அதற்காகத்தான் நாம் அடிக்கடி ஸ்வாமிகளின் ஆராதனையில் அலங்காரபந்தியில் மத்வமதப்படிப்புள்ள சரியான யோக்யதாம்சம் பெற்றவர்களை உட்கார்த்தவேண்டுமென்று வற்புறுத்துகிறோம். இப்படியிருக்க இதற்கு அஸ்திவாரமான ஆவாஹனமே அலங்காரபந்தி பிராம்மணர்களுக்குப் பூஜகர்களால் செய்யப்படுவதில்லை என்பது வெளிவந்தால், இதைவிட வேறான ஏமாற்றம் சாமானியர்களுக்கு என்ன வேண்டும்? சிராத்தத்தில் நிமந்தாண பிராம்மணர்கள் எப்படி பித்ருக்களின் ஆவாஹனம் பெற்று அவர்களின் போஜனம் பித்ருக்களை விசேஷமாய் திருப்திப்படுத்துகிறதோ, அப்படித்தான் அலங்காரபந்தி பிராம்மண போஜனமும், அந்த பிராம்மணர்கள் ஆவாஹனம் பெற்றால்தான் திருப்தியை அளிப்பதாகும். ஆதலால் இனி ஆஸ்திக மாத்வர்கள் ஆங்காங்கும் நடக்கும் ஆராதனை முதலியவைகளில் அலங்காரபந்தியில் பிராம்மணர்கள்உட்கார்த்திவைக்கப்படும்பொழுது, அந்தந்த ஸ்வாமிகளின் பெயரைச் சொல்லி பூஜகரால் ஸங்கல்பம் செய்யப்படுகிறதா. ஆவாஹனம் செய்யப்படுகிறதா, அர்க்யாதிகள் கொடுக்கப்படுகின்றனவா, அந்த அலங்காரபந்தி பிராம்மணர்கள் மத்வஸித்தாந்தத்தின் படிப்புள்ள யோக்யதாம்சம் பெற்றவர்களா என்பதில்தான் அதிக கவனத்தைச் செலுத்த

வேண்டுமேயல்லாது, அவர்கள் நூதனவஸ்திரமுடுத்து மாலைகளை தரித்து, கமலகந்தாக்ஷதை துலங்க, பஞ்சபக்ஷ பரமான்னஸஹிதமான அன்னத்தை ஒழுங்காய் போஜனம் செய்கின்றனரா என்பதில் அதிக கவனத்தைச் செலுத்தவேண்டியதில்லை. அதற்காகவே அமர்ந்த அந்தணர்கள் தாமே அதில் அதிக கவலை கொண்டிருப்பார்கள். இந்த தாவாவை மேல் நடத்தாதிருக்க வாதியை ஸ்ரீராகவேந்திர ஸ்வாமி மடாதிபதிகள் தடுத்துவிட்டதால், இந்த தாவா விசாரணைக்கு வராமல், அஸல் ஸைட்டில் கொண்டுவா தற்போது வாபீஸ் செய்யப்பட்டிருக்கிறது.

---

# த்வைத வேதாந்த பால சிக்ஷை

## பெரிய பாடம்

## 1 ஸத்குருவின் மகிமை

ஒருவன் மோக்ஷமடைய முக்ய ஸாதனமானது பகவானை நேரில் பார்ப்பதாகிய அபரோக்ஷ க்ஞானம் அதற்கு ஸாதனங்கள் அநேகம். அவைகளில் பெரும்பான்மையில் விசேஷ ஸம்பந்தம் பெறுபவர் ஸத்குருவே ஆவார். குருஸேவையும் ஒரு ஸாதனம். "மஹத் ஸேவாம் த்வாரமாஹுர் விமுக்தே: தமோத்வாரம் யோஷிதாம் ஸங்கிஸங்கம்" என்கிறது பாகவதம். குருஸேவையால் குருவின் ப்ரஸாதம் கிடைக்கும். குரு ப்ரஸாதம் ஏற்பட்டால் பகவானுடைய அபரோக்ஷம் ஏற்படுவது நிச்சயம். "ஸம்யக் குருப்ரஸாதஸ்ச முக்யதோ த்ருஷ்டி காரணம்" என்றார் ஸ்ரீமத்வாசாரியார். "குரு ப்ரஸாதோ பலவான் ந தஸ்மாத் பலவத்தரம்" என்கிறது ஓர் பிரமாணம். ஒருவனுக்கு ஸத்குருவாய் வந்து, அவர் சிஷ்யனிடம் மகிழ்ந்து, இன்னது ஆகட்டும் என்று அவர் அனுக்ரஹித்துவிட்டால், சிஷ்யனுக்கு அது நடந்தே தீரும். "ஸம்யக் லக்ஷணஸம்பன்னோ யத் தத்யாத் ஸுப்ரஸன்னதீ:) சிஷ்யாய ஸத்யம் பவதி தத் ஸர்வம் நாத்ர ஸம்சய:" என்று உறுதி கூறப்பட்டிருக்கிறது. ஸத்குருவின் வாயால் வந்தது ஒருக்காலும் பொய்க்காது. குரு சபித்துவிட்டால் சிஷ்யனுக்கு அபரோக்ஷ க்ஞானமும் மோக்ஷமும் ஏற்படாமலே போகுமோ என்றால், அத்தருதியாய் இவைகள் ஏற்படாமல் போய்விடாது. ஆனால் க்ஞானம்

ஆலஸ்யமாய் ஏற்படும். மோக்ஷத்தில் ஆனந்தஹ்ராஸம் அதாவது ஆனந்தப்பெருக்குதான் இல்லாமல் போகும். இப்பேர்ப்பட்ட சாபம் எதாவது ஓர் சந்தர்ப்பத்தில்தான் பிரபலமான காரணத்தால் ஏற்படும். அவ்வாறு ஏற்படுவதற்கு பகவத் ஸங்கல்பமே காரணம் என்று நிச்சயிக்க வேண்டும்.

குருவின் உபதேசமும் மோக்ஷத்திற்கு ஒரு ஸாதனம். குருவின் உபதேசமில்லாமல் புஸ்தகங்களைப் பார்த்து உண்டான சாஸ்திர க்ஞானம் மோக்ஷத்திற்கு ஸாதனமாகாது. "ஆசார்யாத் ஏவ வித்யா விதிதா ஸாதிஷ்டம் ப்rrபயதி" என்கிறது சாந்தோக்ய சுருதி. குருப்ரஸாதம் இல்லாமல் கிடைத்த வித்யை சொன்னபடி பலனைத் தராது. குருப்ரஸாதத்தால்தான் பலிக்கும். "அப்ரஸாதாத் குரோர் வித்யா ந யதோக்த பலப்ரதா: | வித்யா: கர்மணி ச ஸதா குரோ: ப்ரோக்தா பலப்ரதா: | அன்யதா நைவ பலதா: ப்ரஸன்னோக்தா: பலப்ரதா:" என்று சொல்லப் பட்டிருக்கிறது. ஸத் சாஸ்திரங்களை சிரவணாதிகளைச் செய்தால் மட்டில் பகவத் அபரோக்ஷம் ஏற்படாது. ஸத்குரு இன்னது செய் என்று சொன்னதை செய்தால் மட்டில் க்ஞானம் ஏற்பட்டு அபரோக்ஷம் ஏற்படும். அதனால்தான் "ஆசார்யவான் புருஷோ வேத" என்று சுருதி அறிவிக்கிறது. குரு உபதேசமில்லாமல் ஒரு சிலருக்கு க்ஞானம் ஏற்பட்டதே என்றால், அவர்கள் ஜன்மாந்தரத்தில் குருவிடமிருந்து ச்ரவணாதிகளைச் செய்ததால் இவ்வாறு ஏற்பட்டது என்று சொல்லவேண்டும். குரூபதேசம் இல்லாமல் அதுவும் சம்பூர்ணமாய் ஏற்பட்டு விடாது. "ஜன்மாந்தரே ச்ருதாஸ்தாஸ்து வாஸுதேவ ப்ரஸாதத: | முனீனாம் ப்ரதிபாஸ்யந்தி பாகேனைவ ந ஸர்வச:" என்று சொல்லப்பட்டிருக்கிறது. தேவோத்தமர்கள் பூமியில் அவதரித்திருந்தால் அவர்களுக்கு இந்த நியமம் இல்லை. குரூபதேசம் அவசியமென்று இல்லை. அவர்களுக்கு தானாகவே க்ஞானம் வ்யக்தம் ஆகும். "அச்ருத ப்ரதிபா யஸ்ய ச்ருதி ஸ்மிருத்ய விரோதினீ | விச்ருதாந்ருஷு ஜாதம் ச தம் வித்யாத் தேவஸத்தமம்" என்கிறது ஒரு பிரமாணம். இதனால் ஒருவர் கேட்டிராத விஷயத்தில் சுருதி ஸ்மிருதிகளுக்கு விரோதமில்லாத அற்புத புத்தி சக்தியை அவர் வெளிக்காட்டினால், அவர் தேவோத்தமர்தான் பூமியில் பிறந்தவர் என்று நிச்சயிக்கப்பட வேண்டியது என்று சொல்லப்படுகிறது. உபதேசம் செய்ய தன்னைவிட மேலான குரு கிடைக்கவில்லை என்று இதராளிடமிருந்து சாஸ்திர சிரவணம் செய்யாமல் விட்டுவிடலாகாது. விஷ்ணு பக்தர்களான பெரியோர்களிடம் தம் சம்சயங்களைச் சொல்லி சிரவணம் செய்து அவர்களிடமிருந்து அந்த சம்சயங்களை நிவி

ருத்தி செய்துகொள்ளப் பார்க்கவேண்டும். போதிப்பவர் இருந்து கர்வத்தால் அவரை அனுஸரிக் கேளாதிருந்தால், ச்ரவணம் செய்யாதிருந்தால், அவனுக்கு நாசம்தான் வரும். "போதகே வித்யமானேபி யே விதுர் ந பரம் ஹரிம் | தேபி யாந்தி தமோ கோரம் நித்யோத்ரிக்தா ஸுகாத்யகம்" என்றே சொல்லப்பட்டிருக்கிறது.

குருவிடம் மிகுந்த பக்தி கொள்ளவேண்டியதாகும். குருபக்தியும் மோக்ஷத்திற்கு ஸாதனம். பகவானிடம் எப்பேர்ப்பட்ட பக்தி செய்யப்படுகிறதோ அப்படித்தான் குருவிடம் செய்யப்படவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. குருமார்கள் எல்லோரிடமும் ஒரே வகை பக்தியைச் செய்யவாகாது. அவர்களின் தாரதம்யத்தின்படித்தான் உத்தம குருவிடம் உத்தம ரீதியிலும் அவருக்குக் குறைந்தவரிடம் குறைந்த ரீதியிலும் காட்டவேண்டும். அப்போதுதான் முக்திக்கு ஸாதனம் ஆகும். "விஷ்ணு பக்திர் தேவபக்தி: குருபக்திஸ்ததைவ ச | தத் தத் ச்ரைஷ்ட்யானுஸாரேண முக்தென நியதஸாதனம்" என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அப்படியானால் குருமார்கள் யார் என்றால் குருமார்கள் இருவகையார்கள். நியதகுரு, அநியதகுரு என்று. அவனவன் எந்தெந்த பகவன் மூர்த்தியை ஆராதித்து உபாஸித்துவந்தால் அவனவனுக்கு உரிய மோக்ஷம் கிடைக்குமோ, அதை அறிந்து உபாஸனமூர்த்திகளைத் தேர்ந்தெடுத்திருக்கும் குரு நியதகுரு எனப்படுவார். ஒருவர் தன் ஹ்ருதயத்திலுள்ள பிம்பமூர்த்தியையே உபாஸிக்கவேண்டியவராய் இருந்தால் அதையும் அவர் அறிந்து சொல்வார். குரு சொன்ன அந்த மூர்த்தியை ஒருவன் உபாஸித்து வந்தால், அந்த மூர்த்தியால் மோக்ஷம் கிடைப்பது நிச்சயம். "த்ருவம் ததைவ முச்யந்தே யாம் மூர்த்திம் ப்ரதிசேத் குரு:" என்கிறது ப்ரமாணம். சிஷ்யனுடைய ஸ்வரூபயோக்யதை இன்னதென்பதை உத்தமகுருதான் அறிவார். மனுஷ்யர்களில் தாழ்ந்தவர்களுக்கு அவர்களைவிட உத்தமர்களான மனுஷ்யர்கள் நியத குருமார்கள் ஆகமாட்டார்கள். சிஷ்யனைவிட குரு உபாஸனை மிகுந்தவராய் இருக்கவேண்டிய அவசியம். மனுஷ்யர்கள் எல்லோரும் பகவானின் நான்கு குணங்களை மட்டில் உபாஸிப்பவரானதால் ஒருவருக்கொருவர் நியதகுரு ஆகமாட்டார். மனுஷ்யோத்தமர்களுக்கும் சக்ரவர்த்திகளுக்கும் ரிஷிகள்தான் நியத குருமார்கள். ரிஷிகளுக்கு தேவர்கள் குருமார்கள், தேவர்களுக்கு வாயு பகவான் குரு. வாயுபகவானுக்கு விஷ்ணுதான் குரு. அவரைவிட உத்தம குரு இல்லை. இதில் சிறிது விசேஷம் உண்டு. தேவர்களில் கீழ்த்தர தேவர்களுக்கு உத்தமதேவர்கள் குருமார்கள். ஸூரியபதவிக்கும் சந்திர

பதவிக்கும் லாயக்காய் இருப்பவர்களான ஸநகன், ஸநந்தன் என்னும் தேவர்களுக்கு, கருடபதவிக்கு அருகராயிருக்கும் ஸநாதனன் என்னும் தேவதை நியதகுரு. இந்திரபதவிக்கு யோக்யரான ஸநத்குமாரர் என்னும் தேவதைக்கும் மேற்சொன்ன கருடபதவிக்கு அருகரான ஸநாதனன் என்னும் தேவர்தான் நியதகுரு. அந்த ஸநாதனன் என்னும் தேவருக்கும் ருத்ரனின் பதவிக்கு அருகராயுள்ள உக்ரதபஸ் என்னும் தேவருக்கும் சதுர்முகன் நியதகுரு. இதிலும் ஓர் விசேஷமுண்டு. பிரம்மபதவிக்கு லாயக்காய் அபரோக்ஷமடைந்தவர்கள் நூறுபேர்கள் உண்டு. அவர்கள் ரிஜுக்கள் எனப்படுவார்கள். அவர்களில் ப்ரம்மபதவிக்கு வருபவர் லாதவ்யர் என்பவர். அவர்தான் ருத்ரபதவிக்கும் கருடபதவிக்கும் வந்து சேரும் தேவர்களுக்கு உபதேசம் செய்பவர்.

இவர்கள் நியத குருமார்களிடமிருந்து சிரவணம் செய்து உபதேசம் பெறும் காலமும் வரையறுக்கப்பட்டிருக்கிறது. மனுஷ்யாதிகள் அநேக ஜன்மங்கள் சிரவணம் செய்யப்படவேண்டும். "பஹூநாம் ஜன்மநாமந்தே க்ஞானவான் மாம் ப்ரபத்யதே" என்றார் பகவான் பகவத் கீதையில். சூரிய சந்திர பதவிக்கு அருகராய் இருப்பவர்கள் நான்கு மன்வந்தரம் சிரவணம் செய்யவேண்டும். இந்திர பதவிக்கு வருபவர் அவருடைய குருவிடமிருந்து சிரவணம் செய்யும் காலம் பத்து மன்வந்தரம். ருத்திர பதவி, கருட பதவி, சேஷ பதவி இவர்களுக்கு அருகர்களாய் இருப்பவர்களுக்கு சிரவணம் செய்யும் காலம் பரார்த்த பரார்த்த காலம் அதாவது சதுர்முகனின் 75 வருஷங்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

பகவத் விஷயமான தத்வத்தை உபதேசம் மட்டில் செய்பவர் அநியத குரு எனப்படுவார். அதுவும் அவசியமாதலால் அப்பேர்ப்பட்டவரும் குருவே ஆவார். ஒரு குருவுக்கு சிஷ்யராயிருந்து விட்டு மற்றவரை குருவாய் வரிக்கலாகாது. பின்பு வந்தவர் முதலில் ஏற்பட்டவரைவிட உத்தமராய் இருந்தால் அவருடைய அனுமதியன்றி பின்பு வந்தவரை குருவாய் வரிக்கலாம். பின்பு வந்தவர் அதமராயிருந்தால் மூத்தவருடைய அனுமதியைப் பெறவேண்டும். ஸமானராய் இருந்தால் இஷ்டப்படி செய்யலாம். தன்னைவிட உத்தமர்கள் சதுர்முகன் வரையில் உள்ள எல்லாருமே அவருக்கு குருமார்கள்தான். அதில் சம்சயமில்லை. ஆனால் அவரவர்களிடம் அவரவர்களுக்குத் தக்க பக்தியை தாரதம்யப்படி காட்டவேண்டும். தன்னைவிட அதமர்களிடமிருந்தும் விளையாட்டாய் க்ஞானத்தைப் பெறலாம். அவர்களையும் மரியாதைக்காக பூஜிக்கவேண்டும். அதமர்களென்று பூஜிக்காமல் இருக்கலாகாது. உபதேசம் செய்வதில்லையே

என்று தன் உத்தமர்கள், குருமார்கள் எப்படி ஆவார்கள், என்று சந்தேகிக்க
லாகாது. ஸர்வோத்தமர்களிடமிருந்து மோக்ஷத்திற்கு அனுக்ஞை அனுமதி
பெறவேண்டியது அவசியம். மேலும் அவர்களிடமிருந்து க்ஞானமும் ஏற்
படவேண்டியதாகும். வித்யையை பிரவிருத்திக்க உத்தமர்களும் குருமார்
கள் பூஜ்யர்களே ஆவார்கள். பிரம்ம வித்யை ஆதியில் ஹயக்ரீவ மூர்த்தி
பகவான்தான் தன் சுவாசக் காற்றால் ப்ரவிருத்தித்தார். அதை ப்ரம்மா
ஸ்வீகரித்தார். பிறகு அவரிடமிருந்து கிரமமாய் கருட சேஷ ருத்திரர்
கள், தக்ஷாதிகள், ஸனகாதிகள், இந்திராதிகள், மனுக்கள் முதலியோர்
ஸ்வீகரித்து உலகில் ப்ரம்ம க்ஞானத்தை ப்ரவிருத்தித்தார்கள். அதனால்
“பிரம்மாத்யா: குரவ: ஸாக்ஷாத்” என்று ப்ரம்மா வரையிலுள்ள எல்லா
உத்தமர்களும் குருமார்கள் எனப்பட்டார்கள். அவர்கள் பூஜ்யர்களாவதற்கு
மற்றொரு யுக்தியும் உண்டு. சிஷ்யர்கள் செய்யும் சிரவண மனனாதிகளால்
ஏற்படும் பலனுக்கு 3 மடங்கான பலன் அவருடைய ஸாக்ஷாத் குருவுக்கு
வந்துசேரும். அந்த குருவை விட அவருடைய குருவுக்கு அதற்கு
இரண்டு மடங்கு அதிகமான பலன் வந்து சேரும். அவரைவிட உத்த
மர்களுக்கு அந்த பலனை விட இரண்டரை மடங்கு அதிகமான பலன்
வந்து சேரும். தேவர்களுக்கு அதைவிட ஆயிரம் மடங்கு அதிகமான
பலன் வந்து சேரும். தேவர்களைவிட பிரம்மாவுக்கு மிகஅதிகம், என்னும்
கணக்குப்படிக்குள்ள அதிகமான பலன் வந்து சேரும். தேவர்கள் ஸமஸ்
தமான ப்ராணிகள் செய்யும் தர்மங்களுக்கும் அவர்களின் க்ஞானத்திற்கும்
நியாமகர்கள். ஆனதால் அவர்களின் தர்மங்கள் க்ஞானங்கள் இவை
களின் பலனை மேலே சொன்ன கிரமப்படி இந்த எல்லா உத்தமர்களும்
அடைகின்றனர். தேவர்களுக்கு அவரவர்களின் உத்தம தேவர்கள் நியாம
கர்கள். எல்லா தேவர்களுடையவும் மனுஷ்யர்களுடையவும் தர்மத்துக்
கும் க்ஞானத்துக்கும் பிரம்மா நியாமகரானதால் எல்லோரைவிட அதிக
மான பலன்களை அவர் அடைகிறார். எக்காரணத்தைக்கொண்டும் குரு
பூஜ்யரே ஆவார் என்றால் அந்த குரு அவருடைய உத்தமருக்கு அபராதம்
செய்துவிட்டார் என்றால் தோஷங் கொண்டவராய் ஆகி சிஷ்யன் குரு
வை போதித்து அவரை திருப்பவேண்டும், அவருக்கு பைத்தியம் முத
லியவைகள் பிடித்தால், அவரைப் பிடித்து கட்டுகிறது அடிக்கிறது முத
லியவைகளைச் செய்து அவர் புத்தியைத் திருப்பலாம். அப்பொழுதும்
அவருடைய புத்தி திரும்பாதிருந்தால் அவரை குரு பதவியிலிருந்து பரித்
யாகம் செய்யலாம். பகவானிடம் பக்தியுள்ள விஷ்ணு பக்தர்களான குரு
மார்கள் விருத்தமான காரியங்களைச் செய்தாலும் நாம் அப்பேர்ப்பட்ட
குருமார்களின் எந்தக் காரியங்களையும் பொருட்படுத்தலாகாது.

(தொடரும்)

ஸ்ரீ ஜகந்நாததாஸர் இயற்றிய

# ஹரிகதாம்ருத ஸாரம்

## 12-வது நாடி ப்ரகரண ஸந்தி.

(முன் 80ம் பக்கம் தொடர்ச்சி)

9 கங்கை முதலான புண்யதீர்த்தங்கள் எழுபத்திரண்டாயிர நாடிகளில் இருக்கின்றனவென்று ஞானிகள் அறிவார்கள். இந்த ரஹஸ்யத்தை சாமானிய ஜனங்களுக்குச் சொல்லி அறிவிக்காமல் சாஸ்திரத்தில் நம்பிக்கையுள்ள மஹனீயர்கள் மேற்கண்ட நாடிநதிகளில் ஸ்நானம் செய்து மகிழ்வார்கள். அவர்கள் தம் நாடிகளில் பாகீரதி முதலான தீர்த்தங்கள் இருக்கின்றனவென்று எண்ணுவதே அந்த தீர்த்தஸ்நானம் எனப்படும். 10 இந்த சரீரத்தில் இருந்தவரும் இடது புறம் வலது புறம் நாடிகளில் தேவர்கள் இவ்வாறு இருப்பதாய் அறியவேண்டும். ப்ரம்மா வாயு ஸரஸ்வதி முதலான தேவர்கள் வலது புறத்து நாடிகளில் இருக்கின்றனர் என்று அறியவேண்டும். இடது புறத்தில் காற்று தின்னும் பாம்பான ஆதிசேஷன், பக்ஷிச்ரேஷ்டனான கருடன், குளிர்மலையான ஹிமவானின் மருமகனான ருத்திரன், ஸ்ரீ கிருஷ்ணனின் பட்ட மஹிஷிகளான ஆறு மஹிஷிகள், சேஷனின் பத்னியான வாருணி, வஜ்ஜிராயுததாரியான இந்திரன், மன்மதன் முதலானவர்கள் இருக்கின்றனர் என்று அறியவேண்டும். 11 இரண்டு புறங்களிலும் தேவர்களுடன் சேர்ந்து விளையாடிக்கொண்டு கருடனை ரதமாகவுள்ள ஸ்ரீமந்நாராயணன் ஸாத்விக, ராஜஸ, தாமஸர்களாகிய மூவகை ஜீவர்களின் யோக்யதானுஸாரமாய் தகுந்த ஸாதனங்களைச் செய்வித்து, பக்தர்களை ப்ரீதியுடன் ஸம்ரக்ஷிப்பார். அஸுரர்களுக்கு உத்தமமான புண்ய பலன்களை அவர்களின் அந்தர்யாமியாய் இருந்து அவர்களால் செய்வித்தும் அவைகள் தக்காதிருக்கும்படி செய்வார். அந்த புண்ய பலன்களைத் தானே அபகரித்துவிடுவார் என்று பொருள். 12 தொப்புளுக்குக் கீழ்ப்பாகம் முதற்கொண்டு தலைவரையில் ப்ரம்ம

நாடி ஒன்றே வியாபித்துக்கொண்டிருக்கிறது. அதில் பகவா
னுடைய நாபிகமலத்தினின்றும் உற்பவித்த பிரம்மா அப்படியே
வாயுபகவான் இவர்கள் இருக்கிறார்கள். அதனால்தான் இதற்கு
ப்ரம்மநாடி என்று பெயர். இதற்கு சாகாநாடிகள் 10. ஆக
மொத்தம் 11-நாடிகளில் க்ஞானேந்திரியங்கள் 5 கர்மேந்திரியங்
கள் 5 மனஸ் ஆகிய பதினொன்று இந்திரியங்கள் ஸம்பந்தம்
பெற்றிருக்கின்றன. அந்த நாடிகளில் சூரியன், சந்திரன், வரு
ணன், அசுவினிதேவர்கள் முதலானவர்கள் எந்த காலத்திலே
யும் வாசம் செய்கின்றனர். 13 தொப்புளின் அடிபாகம் முதற்
கொண்டு ஒரே நாடிதான் கோணல் முதலியவை இல்லாமல்
தாராளமான உருவத்துடன் சரீரத்தின் நடுவில் ஸுஷும்னை
என்ற பெயருடன் இருந்துவருகிறது. வாயுபகவான் அஸுரர்
களை அந்த நாடியில் உள்ளே பிரவேசிக்கவிடாமலும் வேறு இத
ரர்களையும் பிரவேசிக்கவிடாமலும் காபந்து செய்துகொண்டு பத்து
திக்கிலேயும் அவர் ஒருவரே சஞ்சரித்துக்கொண்டு இருக்கிறார்.
14 இவ்வாறு நாடியின் சாகைகள் இந்த சரீரத்தில் இருக்கின்றன
வென்பதைக்கொண்டு, தன் அநந்தாநந்தமான ரூபங்களில் சிறி
தும் பேதம் கொள்ளவில்லையாதலால், ஏகாத்மா எனப்படும் பக
வான் நாராயணன் 72,000 ரூபங்களை தரித்து அவ்வளவு லக்ஷ்மீ
ஸ்வரூபங்களாகிய அவரவர்களின் பாரியைகளோடுகூட, இவ்
வாறு பிரம்மாண்டத்திற்குள் எல்லா ஜீவர்களுக்குள் ஸ்வயம்
இருந்துகொண்டு, அதை இதரர்கள் அறியமுடியாமல் மோகிக்கச்
செய்வார் என்றிவ்வாறு தெரிந்து உபாஸிக்கவேண்டும். 15 ஒவ்
வொரு நாளும் விருத்தியாகிக்கொண்டுவரும் ஆம்பல்புஷ்பத்தின்
பந்துவான சந்திரனின் கிரணங்களின் சோபையை கண் இழந்த
வன் எப்போதும் பார்த்து சந்தோஷப்படுவானா ? இவ்
வாறு லக்ஷ்மிதேவியின் மனதைக் கொள்ளைகொள்ளும் ரூபத்
தைக் கொண்ட ஸ்ரீமந் நாராயணனின் உத்தமமான மகிமை
களைச் சொல்லும் பக்தர்களுக்கல்லாமல், ஹீனமான புத்தி
படைத்து பகவானுடைய இந்த மகிமைகளை எல்லாம் ஒன்றுமே
இல்லை என மறைத்து, அவரிடம் த்வேஷத்தையும் பக்தர்களின்
த்வேஷத்தையும் வளர்த்தும் குத்ஸிதமான மனுஷ்யர்களுக்கு

இந்த உத்தமமான ஹரிகதாம்ருதத்தின் போஜனம் அகப்படுமா என்ன? அகப்படவே மாட்டாது. 16 வஸ்திரத்தில் எப்படி நீளமாகவும் குறுக்கேயும் நூல்கள் ஓடுகின்றனவோ, அப்படி இந்த சரீரத்தில் ஓதப்ரோதமாய் நாடிகள் படர்ந்து இருக்கின்றன. அந்த நாடிகளில் இந்திரன் முதலான தேவர்கள், தங்களை விட உத்தமர்களான கருடன், சேஷன் முதலானவர்களுடன் சேர்ந்து, அஸுரர்களை பயமுறுத்திக்கொண்டு, ஒருவருக்கும் புலப்படாமல் எல்லோரையும் நன்கு போஷித்துவருவதால் ஸங்காதன் எனப் பெயர் பெற்றிருக்கும் பகவானை உபாஸனைசெய்து சந்தோஷப்படுகின்றனர். 17 ஜலத்தில் சஞ்சரிக்கும் ப்ராணிகள், பூமியில் சஞ்சரிக்கும் ப்ராணிகள், ஆகாயத்தில் சஞ்சரிப்பவைகளான ப்ராணிகள் ஆகிய மூவகை ப்ராணிகளின் சரீரங்களிலேயும் இருந்து, ஒருவருக்கும் புலப்படாமல், அந்தந்த ரூபங்களுடனும் அந்தந்த நாமங்களுடனும் அழைக்கப்பெற்றவராய், கமலாக்ஷனை பகவான் நாராயணன் பலவகைக் கர்மாக்களை நிரந்தரமாய் செய்து, அந்தந்த கர்மாக்களின் பலன்களைத் தான் அனுபவிக்காமல் சாச்வதமான ஸுகபூர்ணரான அந்த பகவான் சஞ்சரிக்கிறார். 18 இவ்வாறு அறிந்து உபாஸனை செய்துகொண்டு இந்த யோகி இப்படி உபாஸனை செய்துவருகிறார் என்று இதரருக்கு அறிவிக்காமல், க்ஞானிகளின் எதிரில் தான் க்ஞானி என்று மீசை தட்டிக்கொள்ளாமல், க்ஞானசூன்யர்களைப்போல் இந்த உபாஸனை செய்தவர்கள் காணப்படுவார்கள், மழை, வெய்யில், பசி, தாகம், ஜயம், பராஜயம், அயோக்யர்கள் செய்யும் நிந்தை, ஸ்தோத்திரம், பயம் இவைகளுக்கு பயப்படாமல், மதம் பிடித்த யானையைப்போல் ஒன்றையும் பாராட்டாமல் இந்த உபாஸனை செய்யும் யோகிகள் சஞ்சரிப்பார்கள்,

(தொடரும்)

## ஸ்வாமிகளின் செய்தி

ஸ்ரீ உத்தராதிமடம் ஸ்வாமிகள் சிடகோபாஸம்ஸ்தானத்தில் இதன் அதிபதிகளான தேசபாண்டே ராகவேந்திரராவ், ஐய்யாபாய் இவர்களால் ஆதரிக்கப்பெற்று சாதுர்மாஸ்யம் நடத்திவருவதாயும், மைசூர் ஸமஸ்தானம் ஸோஸலேயில் ஸோஸலே ஸ்ரீ வியாஸராஜ மடத்தாரும், மந்திராலயத்தில் ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமி மடத்தாரும், ஷிமோகா ஜில்லா சிபானகுப்பா என்னும் கிராமத்தில் குந்தாபூர் ஸ்ரீ வியாஸராஜ மடத்திய ஸ்வாமிகளும் சாதுர்மாஸ்யம் நடத்திவருவதாகவும் தெரியவருகிறது.

---

## விசேஷ தினங்கள்.

| | | |
|---|---|---|
| 17—10—43 | சுக்ரவாரம் | துலாஸங்கிரமண புண்யகாலம் பகல் மணி 1-க்குமேல் |
| 24—10—43 | பானுவாரம் | ஏகாதசி உப. |
| 25—10—43 | சோமவாரம் | த்வாதசி. ஹரிவாஸரம் மணி 9-52க்குமேல் பாரணை |
| 27—10—43 | புதவாரம் | தீபாவளி இரவு பண்டிகை. விடியற்காலை மணி 6-13-க்கு அனைவருக்கும் அப்யங்கம் அவசியம் |
| 28—10—43 | குருவாரம் | தீபாவளி பகல் பண்டிகை தர்சம் திலதர்ப்பணம். விஷ்ணுப. உப. மஹாலக்ஷ்மி பூஜை |
| 30—10—43 | சனிவாரம் | பலிப்ரதமை |
| 5—11—43 | சுக்ரவாரம் | ச்ரவணம் உப. விஷ்ணுப. உப. |
| 7—11—43 | பானுவாரம் | விஜயதாஸர் புண்யதினம் |
| 8—11—43 | சோமவாரம் | உத்தான ஏகாதசி உப. |
| 9—11—43 | மங்களவாரம் | உத்தான த்வாதசி. மாலையில் க்ஷீராப்திபூஜை. துளஸீ விவாஹம். சாதுர்மாஸ்ய வ்ரதம் பூர்த்தி |
| 12—11—43 | சுக்ரவாரம் | பௌர்ணமி. கார்த்திக ஸ்நானம் ஸம்பூர்த்தி. வனபோஜனம் விஷ்ணுப. உப. இல்லை. |

## மாத்வமித்திரன் பிரசுரங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. ஸ்ரீ ராகவேந்திர ஸ்தோத்திரம் (தமிழிலும், தேவநாகரத்திலும் மூலமும் தமிழில் உரையும்) 2-ம் பதிப்பு | 0 | 3 | 0 |
| 2. ஷை ஸ்தோத்திரம் உள்பட ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகள் அதி அற்புத ஜீவிய சரித்திரம் (தமிழ்) | 0 | 8 | 0 |
| 3. ஸ்ரீ வாயுஸ்துதி (தேவநாகரத்தில் மூலமும், தமிழில் உரையும் புனஸ்சரண முறையுடன் 2-ம் பதிப்பு | 0 | 5 | 0 |
| 4. மாத்வஸ்திரீகளின் ஸம்பிரதாய ஜபமங்கள ஸ்தோத்திரங்கள் (தமிழிலும், கன்னடத்திலுமுள்ள 38 அபூர்வமானவைகள் கொண்டது, இதுவரை யாவராலும் பிரசுரிக்கப்படாதது. | 0 | 3 | 0 |
| 5. துவைதமத விளக்கம் (ஸ்ரீமத்வாசாரியார் ஜீவிய சரித்திரம் ஆய்போன் படத்துடனும் தமிழ்) | 0 | 2 | 0 |
| 6. கும்பகோண மாகாத்மியம் (தமிழ்) | 0 | 2 | 0 |
| 7. ஸ்ரீமத் பாகவதம் விஷ்ணு புராணத்தின்படி துருவ சரித்திரம் (நாடகம்-தமிழ்) | 0 | 4 | 0 |
| 8. மாத்ருகர்மாலாஸ்தவம், ரத்னமாலா முதலிய அற்புத ஆறு நூல்கள் (ஸம்ஸ்கிருதம் தேவநாகரத்தில்) | 0 | 2 | 0 |
| 9. மாத்வ புருஷர்களின் அவலா பூஜா பத்ததி | 0 | 4 | 0 |
| 10. ஜீவப்ரம்மபேதம் ஜகத்ஸத்யம் முதலான நான்கு மத்வமத ப்ரமேயங்களை நிரூபிக்கும் பகவத் கோதத்வம் (தமிழிலும் தேவநாகரத்திலும் மூலமும், தமிழில் அர்த்தமும்) சுமார் 250 பக்கங்கள் | 0 | 8 | 0 |

11. மாத்வமித்திரன் ஒன்று முதல் ஏழு வால்யங்கள் சுமார் 2200-பக்கங்களைக்கொண்டது மணிமஞ்ஜரி மத்வ விஜயம் ஸ்ரீ மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் முதலான மாத்வ கிரந்தங்கள், உபநிஷத்துக்கள் புருஷஸூக்தம், ஸந்தியாவந்தனம் முதலான மந்திரங்கள் த்வாதச ஸ்தோத்திரம் முதலான ஸ்தோத்திரங்கள் ஸ்ரீ ராகவேந்திரர் முதலான பல மாத்வ மகான்கள், தாஸர்கள் இவர்களின் சரித்திரங்கள் புராண விரத கதைகள் ஆசார அனுஷ்டானங்கள் தர்ம சாஸ்திர குறிப்புகள் முதலான பதினுயிரக்கணக்கான விஷயங்களைக் கொண்டது. V. P-ல் கிடையாது. பூரா பணமும் அட்வான்ஸில் தேவை. ரயில் பார்சல் செலவு தனி. முன்விலை ரூ. 21 தற்போது ரூ. 5—0—0 தான்

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீ வியாஸ விலாஸம், கும்பகோணம்

வருட சந்தா ரூ. 3. Regd. No. M. 2419.


# டி. எஸ். ஆர்.

அண்டு

# கம்பெனி,

## கும்பகோணம்.

ஸ்தாபிதம் 1909

தந்தி விலாசம் "கோகுல்"

எங்கள் வாஸனா திரவியசாலையில் தயாரித்து விற்பனைக்குத் தயாராக இருக்கும் சாமான்களின் விபரம்.

- வாஸனைப் பாக்கு
- வாஸனைச் சுண்ணாம்பு
- வாஸனைப் புகையிலை
- ஸ்னப்பவுடர்
- கேஸர் பவுடர்
- அம்பர், அரகஜா
- தசாங்கம்
- பலகாய்கறி ஊர்காய்கள்
- ரோஜாப்பூ குல்கந்து
- ஷர்பத் தினுசுகள்
- கொப்பரைச்சீவல்
- கோகுல் கூந்தல் தைலம்
- பற்பொடி,
- ஊதுவத்திகள்

சந்தனாதித்தைலம்,

அரைக்கீரை விதைத்தைலம்,

மற்றும் அநேக வாஸனை சாமான்களும் கிடைக்கும்.

கேட்லாக்குக்கு எழுதுங்கள்.


Printed by N. Subramania Iyer, at Sri Venkateswar Power Printing Works.
Edited & Published by Bhagavatha Renganathacharlar, Kumbakonam.